2008 நவம்பர் 13]

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசாங்கப் பள்ளிகளைப் பொறுத்தமட்டிலே, நபார்டு வங்கி மிகப் பெரிய அளவிலே அதற்கு உதவி செய்திருக்கிறது. அவர் இங்கே என்னிடத்திலே ஒரு விவரத்தைக் கேட்டிருக்கிறார். நபார்டு வங்கியினைப் பொறுத்தமட்டிலே, நம்முடைய தமிழகத்திலே 1 முதல் 8 பிரிவாக இதுவரை கொடுத்திருக்கிறார்கள். Phase 1 to Phase 8 வரை நம்முடைய மாநிலத்திலே அவர்கள் பணிகளை மேற்கொண்டிருக்கிறார்கள். Phase 1-லே ரூபாய் 18.36 கோடி, இரண்டாவது கட்டத்திலே ரூபாய் 80.44 கோடி, 3-வது கட்டத்திலே ரூபாய் 83.74 கோடி, 4-வது கட்டத்திலே ரூபாய் 130.10 கோடி, 5-வது கட்டத்திலே ரூபாய் 102.3 கோடி, 6-வது கட்டத்திலே ரூபாய் 161.31 கோடி, 7-வது கட்டத்திலே ரூபாய் 131.69 கோடி என்று வரிசையாகக் கொடுத்திருக்கிறார்கள். இறுதியாக, இப்போது கொடுத்திருக்கக்கூடிய முன்மொழிவுகள் முன்பு எப்போதும் இல்லாத வகையிலே, ஏறத்தாழ 362 பள்ளிகளுக்கு 410 கோடி ரூபாய்க்கு இந்த ஆண்டு Phase 8-லே நம்முடைய பள்ளியிலே ஆய்வகங்கள் கட்டுவதற்கு, கூடுதல் வகுப்பறைகள் கட்டுவதற்கு, அதுபோல கழிவறை வசதிகள் ஏற்படுத்துவதற்கு நபார்டு வங்கி நமக்கு உதவி செய்திருக்கிறது என்ற தகவலை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 29, மாண்புமிகு உறுப்பினர் திரு. இல. வேலுசாமி, மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

29—

மேம்பாலம்

***25868—திரு. இல. வேலுசாமி:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி தொகுதி, கோடுஅள்ளி ஊராட்சி, வேப்பமரத்தூர்-சௌளாகரபட்டி இடையில் வேப்பாடி ஆற்றின் குறுக்கே மேம்பாலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

|2008 நவம்பர் 13

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

தற்போது பரிசீலனையில் இல்லை

முற்பகல் 10-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இல. வேலுசாமி.

திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டத்திற்கும், சேலம் மாவட்டத்திற்கும் எல்லையாக அமைந்துள்ளது இந்த வேப்பாடி ஆறு. ஏற்காடு மலையடிவாரத்திலிருந்து தொப்பூர் வரை ஏறக்குறைய 30 கிலோ மீட்டர் தூரத்திற்கு இந்த வேப்பாடி ஆறானது பாய்ந்து, மழைக் காலங்களில் ஏறக்குறைய 2 மாதம் தொடர்ந்து அந்த மழை வெள்ளமானது வந்து கொண்டிருக்கிறது. சேலம் மாவட்டத்திலே இருக்கின்ற ஓமலூர் சட்டமன்றத் தொகுதியின் வேப்பாடி ஊராட்சியிலே ஏறக்குறைய 15 கிராமங்கள் இருக்கின்றன. அதைப்போலவே, தருமபுரி சட்டமன்றத் தொகுதியிலே 20 கிராமத்து மக்கள், ஏறக்குறைய 20,000 மக்கள்தொகை அந்தப் பகுதியிலே இருக்கிறது. சேலம் மாவட்டத்திலே இருக்கக்கூடிய அந்த மக்கள், தருமபுரி தொகுதியிலே இருக்கக்கூடிய முத்தம்பட்டி உயர்நிலைப் பள்ளிக்கு நூற்றுக்கணக்கான மாணவர்கள் தினந்தோறும் வந்து செல்கிறார்கள். அதைப்போலவே மருத்துவத்திற்காக நோயாளிகளும், கால்நடைகளும் இந்தப் பகுதிக்கு தினந்தோறும் ஆயிரக்கணக்கில் வந்து செல்கிறார்கள். மழைக்காலங்களில் ஏறக்குறைய ஒரு மாதகாலம் இவர்கள் செல்லமுடியாத அளவிற்கு அந்த மழை நீர் சென்று கொண்டிருக்கிறது. அங்கே மாணவர்கள் எல்லாம் கயிறுகளிலே தொட்டில் கட்டிக்கொண்டு செல்லுகின்ற காட்சியானது நமது செய்தித் தாள்களிலும், தொலைக்காட்சிகளிலும் வந்திருக்கிறது. சட்டமன்றத்திலேகூட நான் ஏற்கெனவே அந்தப் பகுதியிலே முத்தம்பட்டி ஊராட்சி, கோவிந்தாபுரத்திற்கு இடையிலே ஒரு பாலம் அமைக்க வேண்டும் என்ற கோரிக்கையை வைத்திருக்கிறேன். நம மாண்புமிகு அமைச்சர் அவர்களும் கட்டுவதாக வாக்குறுதி கொடுத்திருக்கிறார்கள். இந்த வேப்பமரத்தூர் என்கின்ற இடத்திலாவது அல்லது முத்தம்பட்டி-கோவிந்தாபுரத்திற்கு இடையிலாவது கட்டாயம், அவசியம் ஒரு பாலம் கட்டித்தர வேண்டும் என்பதை முன்வைத்து, அமைச்சர் அவர்கள் கட்டித் தருவாரா என்று கேட்டு அமர்கிறேன்.

2008 நவம்பர் 13]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற பிரச்சினை நியாயமானதுதான். ஆனால், இப்பொழுது நெடுஞ்சாலைத் துறையின் மூலமாகப் பராமரிக்கப்பட்டு வருகிற சுமார் 62,000 கிலோ மீட்டர் சாலைகளில் இருக்கின்ற பாலங்களை அகலப்படுத்துவது, அல்லது தாழ்வான பாலங்களை உயர்மட்டப் பாலங்களாக உயர்த்துவது, சாலைகளைப் பராமரிப்பது போன்ற பணிகளுக்கே ஒதுக்கீடு செய்யும் நிதி சரியாக இருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடக்கூடிய இடமானது ஊராட்சி ஒன்றியத்திற்குரிய சாலை. ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற வேப்பாடி ஆற்றின் இரண்டு பக்கமும் மாவட்ட இதர சாலை செல்கிறது. அந்த இரண்டு சாலைகளையும் இணைக்கக்கூடிய சாலையானது ஊராட்சி ஒன்றிய சாலை. எனவே, மேற்படி பாலம் கட்டுவது குறித்து தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை. எதிர்காலத்திலே மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரோடு கலந்து பேசி அதற்குரிய நடவடிக்கை எடுப்பதற்கு நெடுஞ்சாலைத் துறையும் நிச்சயமாக உறுதுணையாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இல. வேலுசாமி.

திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதேபோன்று எனது தருமபுரி நகராட்சிக்கு உட்பட்ட பகுதியில், தருமபுரிக்கும் அன்னசாகரம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்தக் கேள்விக்குச் சம்பந்தமாகக் கேளுங்கள்; இதுவே முடியவில்லை; அடுத்த கேள்விக்குப் போகிறீர்களே! இதிலே ஏதாவது supplementary question இருக்கிறதா?

திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே குறிப்பிட்டதைப்போலவே அந்தப் பகுதியில் ஏறக்குறைய பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள், மழைக் காலங்களில் ஏறக்குறைய இரண்டு மாதம் போக்குவரத்து இல்லாமல் கடுமையாகப் பாதிக்கப்படுகிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதற்குச் சிறப்புக் கவனம் செலுத்தி, இந்தப் பாலத்தை அவசியம் கட்டித் தருவாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே என்னுடைய பதிலில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. எனவே, தொடர்ந்து அதுகுறித்து நெடுஞ்சாலைத் துறை பரிசீலனை செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 30, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். பன்னீர்செல்வம், மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

30—

விடுதி வசதி

***29192—திரு. எம். பன்னீர்செல்வம்:**

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சீர்காழி தொகுதி, திருமுல்லைவாசல் ஆதி திராவிடர் மேல்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு விடுதி துவக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கின்றேன்.

மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் கடந்த இரண்டு ஆண்டுகளில் 50 புதிய மாணவர்கள் விடுதிகளைத் துவக்குவதற்கு ஆணையிட்டுள்ளார்கள். அதன் அடிப்படையில் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுடைய சீர்காழி தொகுதியில் மாதாணத்தில் புதிய மாணவர்கள் விடுதி துவக்குவதற்கு நமது முதல்வர் அவர்களால் ஆணையிடப்பட்டுள்ளது. இந்நிலையில் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சீர்காழி தொகுதியில் திருமுல்லைவாசலில் மாணவர்கள் விடுதி வேண்டும் என்று வினா எழுப்பியுள்ளார்கள். தற்போது அங்கு மாணவர்கள் விடுதி துவக்குவதற்கு வாய்ப்புகள் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். பன்னீர்செல்வம்.